R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2019 at Batlagundu Post office.
September 2019



முதல் பிரதியை பெற்றுக் கொள்பவர் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபை அங்கத்தினர் சகோ.ரஞ்சித் அதற்காக ஜெபித்தவர் சகோ.ஜான் ஸ்டேன்லி சபை போதகர் புதுக்கோட்டை

கிறிஸ்துவின் வசனம் வானொலி மற்றும் தொலைக்காட்சி செய்தி - Vol.5

Cell : 94435 58041
6379350509
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Monday 6.00 P.M on Tamilan TV
&
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 19 | செப்டம்பர் 2019 | கனி 10

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
Every Monday 6:00 - 6:15 pm on Tamilan TV
Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV



**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Every Sunday 6:45 - 7:00 am on Tamilan TV
Every Sunday 3:30 pm on Nambikkai TV

**Rajanayagam in Tamil:**
Every Monday 7:00-7:15 am on Tamilan TV
Every Thursday 9:30-10:00 pm on Tamilan TV
Every Saturday 7:15-7:30 am on Tamilan TV



**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P.




எமது
'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'
புதிய வெளியீடு
கிறிஸ்துவின் வசனம்
ரேடியோ மற்றும் தொலைக்காட்சி
செய்திகள் அடங்கிய புத்தகம்
Vol.5
எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்




**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 229


போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. தன் மனைவியுடன் வந்து கிறிஸ்துவைப்பற்றும், விசுவாசத்தைக் குறித்து பவுல் சொல்லக்கேட்டவன் யார்?
2. உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார் அவர்... கழுதையின்மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார் என்று எந்த தீர்க்கனைக் கொண்டு கர்த்தர் சொன்னார்?
3. விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா?
4. தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் இஸ்ரவேலுக்குச் சொன்னார்?
5. நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன் என்ற அப்போஸ்தலன் யார்?
6. எகிப்தின் ஒரு எல்லை முதல் மறு எல்லைவரைக்குமுள்ள ஜனங்களை அந்தந்தப் பட்டணங்களில் குடிமாறிப்போகப் பண்ணினவன் யார்?
7. உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
8. விசித்திரமான வேலைகளை யோசித்துச் செய்ய கர்த்தர் யூதாவின் கோத்திரத்தில் எவனைப் பேர்சொல்லி அழைத்தார்?
9. நீங்கள் இத்தனை புத்தியீனரா? என எந்த நாட்டு சபைகளுக்கு பவுல் கடிதம் எழுதினார்?
10. உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள் சொல்லித் திரியாயாக: பிறனுடைய இரத்தப்பழிக்கு என்னசெய்யப்படவேண்டாம் நான் கர்த்தர் என்றார்?

## வேதாகம ஆய்வு... 14

நாதாபு & அபியூ



Nadab & Abihu

1. அபியூ என்றால் அவர் என் பிதா என்று அர்த்தம்.
2. நாதாபும் அபியூவும் ஆரோனின் குமரார்கள் – யாத்.6:23
3. நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் மரித்தார்கள் – எண்.3:4
4. தங்கள் தகப்பனுக்கு முன்னே மரித்தார்கள் – 1நாளா.24:2
5. இருவரும் குமாரர் இல்லாமல் மரித்தார்கள் – 1நாளா.24:2

சிறுவர் பகுதி

## எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று நம்பிக்கை அற்றுப்போயிற்று

**வேதபகுதி:எசேக்கியேல் 37:1-14**



எலும்புக்கூடு பார்த்திருக்கிறீர்களா? பள்ளி ஆய்வுக்கூடத்தில் பார்த்து இருப்பீர்கள். அம்மாதிரியான உலர்ந்துபோன எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவிலே எசேக்கியேல் தீர்க்கதரிசியை கர்த்தர் கொண்டு போனார். நீங்களா இருந்தா, பார்த்து பயந்து போயிருப்பீங்க. எசேக்கியேல் தீர்க்கதரிசியை அந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கைச் சுற்றி நடக்கப்பண்ணினார். பின்பு, மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு எசேக்கியேல்: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றான்.

அப்பொழுது கர்த்தர் நீ இந்த எலும்புகளைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்து அவைகளைப் பார்த்து உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். நான் உங்கள்மேல் நரம்புகளைச் சேர்த்து, உங்கள் மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத்தோலினால் மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன் அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்களென்று உரைக்கிறார் என்று சொல் என்றார். அந்தப்படியே எசேக்கியேல் சொல்ல ஒரு இரைச்சல் உண்டாகி ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்து அவர்கள் உயிரடைந்து காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்.

இஸ்ரவேலருக்கு பாடம் புகட்டவே கர்த்தர் இவ்விதமான காரியத்தை எசேக்கியேலுக்கு முன்பாக நடப்பித்தார். நம்மில் அவிசுவாசமுள்ளவர்களாக இருப்பவர்களுக்கும் இது பாடமாக அமையும். இதோ, அவர்கள் எங்கள் எலும்புகள் உலர்ந்து போயிற்று; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் அறுப்புண்டு போகிறோம் என்கிறார்கள். நான் உங்கள் பிரேதக் குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக் குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவும்பண்ணுவேன். அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள் என்றார். செத்து நாலு நாட்களான லாசருவை நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கல்லறையிலிருந்து எழுப்பினார் அல்லவா?

இந்த இஸ்ரவேலர்களைப் போல எங்கள் எலும்புகள் உலர்ந்து போயிற்று, எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று, நாங்கள் அறுப்புண்டு போகிறோம் என்று அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசாதிருங்கள். உலர்ந்து போன எலும்புக்கு உயிர் கொடுக்கும் தேவன் நம் கர்த்தர். அவர்மீது அசையாத நம்பிக்கை வைக்க வேண்டும். வைப்பீர்களா?

**மனப்பாட வசனம்**

**“என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்”**

**எசேக்கியேல்37:14**

‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ மாத இதழை ஒவ்வொரு மாதமும் 10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509 என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 19 செப்டம்பர் -2019 கனி - 10


ஆசிரியருரை

## முதல் நூற்றாண்டில் கர்த்தருடைய சபை
## The Lord`s Church In The First Century



முதல் நூற்றாண்டு சபை இயேசுவின் இரண்டாம் வருகை வரையுள்ள கர்த்தருடைய சபைகளுக்கு மாதிரியாயிருக்கிறது. உலகமெங்கும் முதல் நூற்றாண்டு திட்டத்தின்படியே சபைகள் ஆரம்பிக்கப்படுகிறது. முதல் நூற்றாண்டு சபையை மாதிரியாக எடுத்துக்கொள்ளாத சபை கர்த்தருடைய சபையாக இருக்காது. அது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சபையாகத்தானிருக்கும். முதல் நூற்றாண்டு சபையானது; "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணிதலிலும் உறுதியாய்த்தரித்திருந்தார்கள்" (அப்.2:42). ஆண்டவர் இயேசு பரமேறிச்சென்றவுடன் அப்போஸ்தலர்கள் எங்கும் திரிந்து கர்த்தருடைய கட்டளையின்படி சுவிசேஷத்தை உலகமெங்கும் அறிவிக்கிற வேலையில் ஈடுபட்டனர். பரிசுத்த வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டை ஆவியானவருடைய உதவியினால் ஏவப்பட்டு எழுதினார்கள். அதில் கிறிஸ்துவின் உபதேசத்தை முழுவதுமாக வெளிப்படுத்தினார்கள். அப்போஸ்தலர்கள் தங்களுடைய சொந்த உபதேசத்தை சொல்லவில்லை. எப்படி இயேசுவானவர் தேவனுடைய வார்த்தைகளையே பேசினாரோ, அதைப்போல அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய சமூகத்தில் கற்றுக் கொண்டதை போதித்தனர், அதை எழுதினர். இந்த உபதேசத்தையே முதல் நூற்றாண்டு சபையார் கைக்கொண்டனர்.

**முதலாவது,** முதல் நூற்றாண்டு சபையார் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தனர்; "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷர்களாயிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:31,32). இந்த வசனத்தின்படி அவர்கள் இயேசுவினுடைய உபதேசத்தில் நிலைத்திருந்தனர். இதுமாத்திரமல்ல அந்நியோந்நியத்திலும் நிலைத்திருந்தனர்; "விசுவாசிகளாக திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது" என அப்.4;32-ல் காண்கிறோம். அடுத்ததாக, அப்பம் பிட்குதலில் நிலைத்திருந்தனர்; "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" (அப்.20:7). ஒவ்வொரு வாரமும் முதல் நாளில் அதாவது ஞாயிற்று

கிழமையில் கூடிவந்து அப்பம் பிட்டு கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூர்ந்தனர். அந்தப்படியாக, ஜெபம்பண்ணுதலிலும் நிலைத்திருந்தார்கள்; "ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம்" என்கிறார் அப்.பவுல் (அப்.16:13). முதல் நூற்றாண்டு சீஷர்கள் இந்த நான்கு காரியங்களில் நிலைத்திருந்திருக்கிறார்கள். இவைகள் நமக்கு ஆதார வசனங்களாயிருக்கிறது. நாம் கிறிஸ்துவின் சீஷர்களாயிருப்போமானால் இந்த நான்கு காரியங்களையும் நாமும் நிறைவேற்றவேண்டியவர்களாயிருக்கிறோம். இயேசு சொல்கிறார்; "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" என்றார் (யோவா.15:10).

**இரண்டாவது,** "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்" (அப்.2:44). முதல் நூற்றாண்டு சபையார் ஒருமித்திருந்தார்கள். ஒருமித்திருக்கும்போது பல ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம். ஆனால் அநேக சமயங்களில் சபைகளில் ஒருமனம் ஏற்படுவது இல்லை. ஆதி சபையார் "ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப்.11;26). கிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் விட்டுவிடாமல் ஒரு வருடமாக சபையோடு ஐக்கியப்பட்டவர்களாக கூடிவந்தபடியால் அவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் கிடைத்தது. சபைக்கே போகாமல் கிறிஸ்துவின் உபதேசப்படி வாழாமல் ஒருவர் எப்படி கிறிஸ்தவராயிருக்க முடியும்? ஆனால் இன்று அநேகர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் முதல் நூற்றாண்டு சபையார் கைக்கொண்ட காரியங்களில் கடுகளவும் கைக்கொள்ளாதிருக்கிறார்கள். மேலும், அவர்கள் ஒருமித்திருந்தார்கள் என்பதற்கு அடையாளமாக; "நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள்" (அப்.4:34). இந்த ஐக்கியம் கர்த்தருடைய ஜெபத்தை நிறைவேற்றுவதாக இருந்தது. "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றார் (யோவா.17:21).

**மூன்றாவது,** பகிர்ந்துகொடுத்தார்கள். "காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள்" (அப்.2:45). இப்படிப்பட்ட எண்ணம் யாருக்கு வரும்? கர்த்தருடைய சீஷர்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம் இருக்கவேண்டும். தனக்கு தனக்கு என்று வாழ்ந்த ஐசுவரியவான் நிலைமையை நீங்கள் அறிவீர்கள். அவன் பாதாளத்திலே வேதனைப்பட்டான். நம்முடைய தேவைகளுக்கு அதிகமானவற்றை மற்றவர்களுக்கு கொடுத்து கர்த்தருடைய ஊழியம் வளர்ந்துபெருக பாடுபடவேண்டும். செய்வீர்களா? ஆண்டவர் இயேசு பகிர்ந்து கொடுக்கும்படி சீஷர்களுக்குக் கற்றுக்கொடுத்த சம்பவத்தை நீங்கள் அறிவீர்கள்? "அவர் அந்த ஐந்து அப்பங்களையும் அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்துபார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப்பிட்டு, அவர்களுக்குப் பரிமாறும்படி தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார். அப்படியே இரண்டு மீன்களையும் எல்லாருக்கும் பங்கிட்டார்" (மாற்.6:41). முதல்



## சபை அமைப்பு
## CHURCH ORGANIZATION

| | |
|---|---|
| சுயாதீன சபைகள் | - அப்.14:23 |
| கிறிஸ்து இயேசுவுக்கே அடிமை | - 1பேது.5:1-4 |
| மூப்பர்களால் வழிநடத்தப்படுதல் | - தீத்து1:5-9; எபி.13:17 |
| உதவிக்காரரால் வழிநடத்தப்படுதல் | - 1தீமோ.3:8-13 |
| போதகர்களால் போதிக்கப்படுதல் | - எபி.5:12-14 |
| பிரசங்கியார்களால் போதிக்கப்படுதல் | - ரோமர்10:13-15 |
| அங்கத்தினர்களால் வழிநடத்தப்படுதல் | - ரோமர்12:4-8 |

### செப்டம்பர் மாதம் சுதந்திர தினம் கொண்டாடும் நாடுகள்



7 ம் தேதி பிரேசில்
16 ம் தேதி மெக்ஸிகோ
18 ம் தேதி சிலி
21 ம் தேதி ஆர்மீனியா

### செப்டம்பர் மாதம் முக்கிய நிகழ்வுகள்

- 1875 ல் மதுரையிலிருந்து திருச்சி வரை முதன் முதலாக புகைவண்டி இயக்கப்பட்டது.
- 1939 ல் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது
- 2012 ல் சுனிதா வில்லியம்ஸ் விண்வெளியில் பறந்து சாதனை படைத்தார்.

## கிறிஸ்தவ ஆராதனை
## Christian Worship

**வாரத்தின் முதல்தோறும்- அப்.20:7**



| | |
|---|---|
| ஜெபித்தல் | - அப்.2:42; 1கொரி.14:15 |
| பாடுதல் | - எபேசி.5:19; கொலோ.3:16 |
| போதித்தல் | - அப்.20:7 |
| கர்த்தருடைய பந்தி | - 1கொரி.11:20-29 |
| கொடுத்தல் | - 1கொரி.16:1,2 |



*Contact Us: 94435 58041*

**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**

1. யாரோ இப்படிச் சொன்னார்: தீர்மானமில்லாத ஜெபம் தடைசெய்யும் நோக்கோடு பேசுவது போன்றது.

2. ஒரு அவை அங்கத்தினர் ஒரு மசோதாவை வாக்கெடுப்புக்கு வரவிடாமல் தடை செய்யும் நோக்கத்தோடு பேசிப் பேசி கடைசி நேரம் வரை இழுத்தடிப்பது. நாம் ஜெபித்து ஜெபித்து ஒருபோதும் கிரியை செய்யாமல் போனால் நம் ஜெபங்கள் வெறும் வீண் பேச்சாகும்.

3. நாம் தேவனிடம் களைத்தவனை தேற்றச் சொல்லுகிறோம். அனால் நாம் "அழுகிறவர்களோடு அழத் தயாரா"?

4. தேவனிடம் தேவையுள்ளோரை ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்கிறோம். ஆனால் நாம் தேவையுள்ளோருக்குக் கொடுக்கிறோமா? நாம் தேவன் மீது எல்லா பொறுப்புகளையும் சுமத்திவிட்டு பின்பு நாம் எல்லாவற்றையும் மறந்து விடுகிறோம்.

5. ஒரு சிறுவன் தன் தந்தை பசியோடிருப்பவர்களுக்காகவும் ஏழைகளுக்காகவும் ஜெபிப்பதைக் கேட்டான். அப்பா ஜெபித்து எனக்கிருந்திருக்க வேண்டுமென்று விரும்புகிறேன் அப்பா, ஏன்? அதைக் கொண்டு நீ என்ன செய்வாய்? உங்கள் ஜெபத்துக்கு பதிலளிப்பேன் என்று மகன் பதிலளித்தான்.

6. தேவனிடத்தில் நாம் பசியுள்ளோரை போஷிக்கவும் பிணியாளியை குணமாக்கவும், மனமுடைந்தோரைத் தேற்றவும் வேண்டுமென்று கேட்கலாம் ஆனால் நாம் என்ன செய்கிறோம்.

7. யாக்கோபு 2:15-16

8. நாம் சபை பரந்து வளர்ச்சியடைய ஜெபிக்கவேண்டும். பவுல் அதைச் செய்தார்.

9. சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதுவே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கி செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது (ரோம.10:1). பவுல் அதை அடைவதற்கு செயல்பட்டார். நாம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த முயற்சிக்கிறோமா?

10. தேவன் நம்மை நோக்கி ஜெபிப்பதை நிறுத்துங்கள் என்று சொல்லும் நேரம் வரலாம்.

நாம் மனந்திரும்புதலுக்கு பதிலாக ஜெபிக்கும்போது தேவன் ஜெபத்தை நிறுத்து என்று சொல்லுகிறார் (யோசுவா). எரிகோவிலே ஆகான் பொருட்களை எடுத்து வைத்த கதையை சம்பந்தப்படுத்திப் பாருங்கள்.

1. யாருக்கும் தெரியாதென்று நினைத்து ஆகான் எரிகோவிலிருந்து பாபிலோனிய ஆடைகள், கொஞ்சம் வெள்ளி மற்றும் பொன் இவைகளை எடுத்து வந்தான். ஆனால் தேவனுக்கு எல்லாம் தெரியும்.

2. அவனுடைய பாவத்தால் சிறிய ஆயி பட்டணத்திலே இஸ்ரவேல் தோற்றுப்போனது.

3. யோசுவா கொஞ்சம் குற்றச்சாட்டுதலையும் சேர்த்து யோசு.7:6-9 ல் ஜெபிக்கிறார்.

4. தேவன் யோசுவாவை ஜெபத்தை நிறுத்தச் சொல்லி, பாளையத்தில் இருக்கும் பாவத்தை எடுத்துப்போடச் சொன்னார் (10-13).

5. தேவன் ஜெபம் முக்கியமல்ல என்று சொல்லவில்லை ஆனால் ஜெபத்தை விட வேறொன்று தேவைப்படுகிறதென்று சொல்லுகிறார்.

6. ஆகான் கல்லெறியப்பட்டான். பாவம் நீக்கப்பட்டது இஸ்ரவேலர் நகரத்தைப் பிடித்தனர்.



நூற்றாண்டு சபையார் சகலத்தையும் பொதுவாக அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தார்கள். அவர்கள் பங்கிடுவதிலும் பகிர்ந்துகொடுப்பதிலும் பாரபட்சம் காட்டாமல் நடந்திருக்கிறார்கள். "அப்போஸ்தருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய்ப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை" (அப்.4:35). அப்படியானால் அவர்கள் எந்தவிதமாக பகிர்ந்தளித்திருப்பார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனை இல்லாமல் கொடுக்கக்கடவன் என்ற வசனத்தின்படி பகிர்ந்தளித்தார்கள்.

**நான்காவது,** கபடமில்லாத இருதயத்தோடிருந்தார்கள். "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி" என வாசிக்கிறோம் (அப்.2;46). கள்ளங்கபடம் இல்லாத இடம், தேவனுடைய பிள்ளைகள் வாழும் இடம். இதை முதல் நூற்றாண்டு சீஷர்கள் மத்தியில் காணமுடிந்தது. இப்படிப்பட்ட இருதயத்தோடு சபைகள் காணப்படவேண்டும். கபடத்தோடு இருக்கும்போது ஒருவரையொருவர் பார்த்து ஸ்தோத்திரம் சொல்லமுடியாது. ஏனெனில் அவர்களுடைய குரோதம் வெளிப்படும். அப்படிப்பட்ட இடத்தில் கிறிஸ்துவின் அன்பு எப்படி வெளிப்படும்? லீதியாள் என்ற பெண் பவுலுடைய வார்த்தைகளைக்கேட்டு; "அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள், எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்" (அப்.16:15). இப்படி முதல் நூற்றாண்டு சபையார் அன்புடன் வீட்டிலே ஏற்றுக்கொண்டு உபசரித்தார்கள். இந்த அன்பு கபடமில்லாத அன்பாக இருந்தது. அதைப்போல கபடமற்ற உத்தமனைக்குறித்து படிக்கிறோம். "இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்" (யோவா.1:47). இவன் இஸ்ரவேலனாயிருந்தும் கபடற்றவனாயிருந்திருக்கிறான். இன்றைக்கு தேவனை அறியாத அநேகர் கூட கபடமற்றவர்களாக இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது தேவனையும், ஆண்டவர் இயேசுவையும், அவருடைய உபதேசத்தையும் அறிந்த ஒருவர் கபடமற்றவராயிருப்பது எத்தனை அவசியமான காரியம். முதல் நூற்றாண்டு சீஷர்களைப்போல மாறுங்கள்.

**ஐந்தாவது,** ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். "தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டுவந்தார்" எனக் காண்கிறோம் (அப்.2;47). எந்த ஒரு சூழ்நிலையிலும் நாம் தேவனை;த துதிக்கவேண்டியவர்களா யிருக்கிறோம். அப்போஸ்தலர்களை அடித்து சிறைச்சாலையில் போட்டார்கள்; "நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்" (அப்.16:25). தேவனைத் துதிப்பதும் அவருடைய நாமத்தை கீர்த்தனம் பண்ணுவதும் எத்தனை நன்மையுள்ளதாயிருக்கிறது. மேலும், நாம் சாட்சியுள்ள மக்களாக வாழவேண்டுமானால் ஜனங்களிடத்தில் தயவு பெற்றிருக்கவேண்டும். அப்பொழுதே நம்முடைய வார்த்தைகளை அவர்கள் மதித்து அவைகளைக் கேட்பார்கள். இல்லையென்றால் ஊருக்கு உபதேசம் செய்கிறவர்களாயிருப்போம். அப்போஸ்தலர்கள் மூலமாக கர்த்தர் செய்கிற காரியங்களைக் கண்டவர்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஆகையால் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் அப்போஸ்தலர்களை சிலவேளைகளில் தண்டிக்கமுடியாமறபோனது. இதை நாம் அப்.4:21-ல் படிக்கிறோம். "நடந்த சங்கதிகளைக்குறித்து எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தினபடியால், ஜனங்களுக்குப்

பயந்து அவர்களைத் தண்டிக்க வகையொன்றுங்காணாமல், அவர்களைப் பயமுறுத்தி விட்டுவிட்டார்கள்". இந்த இடத்தில் அப்போஸ்தலர்களுக்கு ஜனங்களுடைய தயவு கிடைத்தபடியால் இம்மார்க்கத்திற்கு எதிராக செயல்படக்கூடியவர்களால் கூட ஒன்றும் செய்யமுடியாமற்போனது.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே, முதல் நூற்றாண்டு சபையாரைப்போல நீ கர்த்தரை தொழுதுகொண்டு வருகின்றாயா? அவர்களைப்போல அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருந்து கர்த்தருடைய சபையில் தேவனை ஆராதித்து வருகின்றாயா? அவர்களைப்போல ஐக்கியத்தில் நிலைத்திருக்கின்றாயா? அவர்களைப்போல ஒருமனப்பட்ட இருதயத்தோடும், கபடமில்லாமல் சகோதர, சகோதரிகளோடு சபையில் தேவனை துதித்துக்கொண்டு வருகின்றாயா? அப்படியில்லையென்றால் இன்றே உன்னை சரிசெய்துகொள். முதல் நூற்றாண்டு சபையார் நம்மெல்லாருக்கும் மாதிரியான சபையாக இருக்கிறது. அந்தப்படியாக நிலைத்திருப்பவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறார். நீ அவருடைய சபையில் நிலைத்திருந்து கர்த்தருக்கு ஏற்ற கனிகளை கொடுப்பாயானால், கர்த்தருடைய வருகையில் நீ அவரோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு நித்திய நித்தியமாக அவரோடு என்றென்றும் ஜீவிப்பாய்.

**முதல் நூற்றாண்டில் சிதறிப்போனவர்கள் என்ன செய்தார்கள்?**

மந்தை சிதறிப்போனால் ஓநாய்களுக்கு நல்ல வேட்டை. ஆனால் இங்கு சிதறிப்போன கிறிஸ்தவர்கள் கர்த்தர் கொடுத்த தலையாயப் பணியை நிறைவேற்றினார்கள். "சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்" (அப்.8:4). இது அவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட கட்டளை என்று நினைத்துவிடாதீர்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் கர்த்தருடைய திருச்சித்தத்தை நிறைவேற்றவேண்டும். அது நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் எப்படி சாட்சியுள்ள மக்களாக உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்களுக்கு மாதிரியாக கர்த்தருடைய கட்டளையில் நிலைத்திருந்தார்களோ அந்தப்படியாக நாமும் நிலைத்திருக்கவேண்டும். எருசலேம் துவங்கி சகல தேசத்திலும் கர்த்தருடைய சபை வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் முதல் நூற்றாண்டில் எருசலேமில் துவங்கப்பட்ட சபையார் எல்லா இடங்களிலும் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றினார்கள். ஆங்காங்கே சபைகளை ஏற்படுத்தி மூப்பர்களையும் ஏற்படுத்தினார்கள். எங்கும் பிதாவை தொழுதுகொள்ளும் காலத்தில் இருக்கிறோம் என்ற கர்த்தருடைய வசனத்தின்படி சுயாதீன சபைகளை ஏற்படுத்தப்பட்டது. இக்காலகட்டத்தில் இருக்கிற நாமும் அவைகளை மாதிரியாக கொண்டு செயல்படவேண்டும். கர்த்தருடைய சபையோடு சேர்ந்து ஊழியம் செய்யுங்கள். கர்த்தர் உங்களையும் உங்கள் முயற்சியையும் ஆசீர்வதிப்பாராக!

**நடப்புச்செய்திகள்**

❒ மாநிலங்களவை உறுப்பினராக முன்னால் பிரதமர் மன்மோகன் சிங் போட்டியின்றி தேர்வாகியுள்ளார்.


❒ 2019–2020–ம் கல்வி ஆண்டுக்கான நீட்தேர்வு 2020 மே 3–ம் தேதி நடைபெறும் என தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

❒ அமெரிக்காவின் பொருளாதாரம் அடுத்த இரு ஆண்டுகளில் மந்த நிலையை சந்திக்கும் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர். ஆனால் இதை அந்நாட்டின் அதிபர் டொனால்ட் டிரம்ப் தனக்கு தோன்றவில்லை எனக்கூறியுள்ளார்.



## எப்பொழுது தேவன் சொன்னார், "ஜெபிப்பதை நிறுத்து"
## When God said, "Stop Praying!"
பாடம் - 34

-Jerry




1. நீங்கள் ஜெபிப்பதை நிறுத்த வேண்டும் எப்போதாவது இதை நீங்கள் இதற்கு முன் கேட்டிருக்கிறீர்களா? நீங்கள் கேட்டிருப்பீர்கள் என்பதை சந்தேகப்படுகிறேன்.

2. ஜெபம் முக்கியமானதென்று வேதவாக்கியங்கள் வலியுறுத்துகின்றன.

அ) **மனிதர் எப்பொழுதும் சோர்ந்து போகாமல் ஜெபம் பண்ணவேண்டுமென்று** இயேசு சொன்னார் (லூக்.18:1).

ஆ) ஆதித் திருச்சபையார் ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருந்தனர் (அப்.2:4 2).

இ) நாம் ஜெபத்திலே அர்ப்பணிப்போடு ஈடுபட வேண்டுமென்று பவுல் சொன்னார்.

ஈ) **இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்களென்று** பவுல் சொன்னார் (1தெச.5:17).

**உ) அன்றியும் புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன் என்றார் (1தீமோ.2:8).**

3. வேறு பல வசனங்களும் ஜெபத்தின் முக்கியத்துவத்தை காண்பிக்கின்றன. ஜெபத்தை நாம் ஒருபோதும் அலட்சியம் பண்ணக்கூடாது அநேகமாக நம்மில் அநேகர் போதுமான அளவு ஜெபிப்பதில்லை.

4. இருப்பினும் தேவனே ஜெபத்தை நிறுத்தச் சொன்ன சில சமயங்களுமுண்டு.

5. காரணம் என்னவென்றால் மனிதர்கள் தேவன் சொன்னபடி செய்வதற்கு பதில் ஜெபித்துக்கொண்டிருந்ததுதான்.

**அ) கிரியை செய்வதற்கு பதில் ஜெபத்தைத் தேர்ந்தெடுக்கும் போது தேவன் சொல்லுகிறார் "ஜெபத்தை நிறுத்துங்கள்".**

இஸ்ரவேல் புத்திரர்கள் (ஜனங்கள்) செங்கடலைக் கடந்து கொண்டிருக்கிறார்கள் (யாத்.14:13-16).

1. அவர்களுக்கு முன்பாக செங்கடல் அவர்களுக்குப் பின்பாக பார்வோனின் படைகள் வேகமாக துரத்தி வருகிறது. இஸ்ரவேல் மக்கள் மோசேயிடம் முறுமுறுக்கின்றனர்.

2. மோசே இஸ்ரவேலர்களை அமர்ந்திருந்து தேவனுடைய இரட்சிப்பைக் காணச்சொன்னார்.

3. தேவனுடைய பதிலிலிருந்து தீர்மானித்தால், மோசே ஜனங்களிடம் அமர்ந்திருந்து ஜெபித்துக் கொண்டிருங்கள். தேவன் அவர்களை இரட்சிப்பார் என்று சொன்னது போலிருக்கும்.

4. வேத வார்த்தைகளில் மோசேயிடம் தேவன் சொன்னது... இது ஜெபத்திற்கான நேரமில்லை. இது செயலுக்கான நேரம்.

5. விசுவாசத்தோடு முன்னேறிப்போங்களென்றார்.

அ) ஜெபம் முக்கியமானதுதான். ஆனால் நாம் கீழ்ப்படிய மறுக்கும்போது அது அர்த்தமற்றதாகிவிடும்.

**வேதகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்



**தற்சோதனை பகுதி – 12**

**12. ஸ்திரீகள் சபைகளில் பேசலாமா?**

1. பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை ☐ வசன ஆதாரம் ---------

2. பேசுவது அவர்களது உரிமை ☐ வசன ஆதாரம்------------------

3. ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------------------

4. ஸ்திரீகள் அநேக சபைகளில் பிரசங்கித்திருக்கிறார்கள் ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------------------

5. ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக் கடவர்கள் ☐ வசன ஆதாரம்-----------------

6. புருஷர்கள் இல்லாதவர்கள் சபையிலே எழுந்து நின்று கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் ☐ வசன ஆதாரம்------------------

7. சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள், வேதமும் அப்படியே சொல்லுகிறது ☐ வசன ஆதாரம்------------------

8. புருஷனுக்கு உள்ள அதிகாரம் சபைகளில் பெண்களுக்கும் உண்டு ☐ வசன ஆதாரம் ---------------------------------------------------

9. கெங்கிரேயா ஊர் சபைக்கு பெபேயாள் என்ற ஊழியக்காரி இருந்தாள் ☐ வசன ஆதாரம்-----------------------------------

10. அவள் அந்த சபையில் பெண்பிரசங்கியாக இருந்தாள் ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**

**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**

**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**



# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

பாடம் -6 கொலைசெய்தல் - **Killing**

-J.C.Choate



**கி**றிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலையும் நன்றியையும் கூறிக்கொள்கிறேன்.

உலகத்தில் அநேக பாவங்கள் உள்ளன, மனிதன் எல்லாவற்றிற்காகவும் குற்ற உணர்வுள்ளவனாயிருக்கிறான். யாரோ ஒருவன் மட்டும் பாவங்களைச் செய்வதில்லை, ஆனால் ஒவ்வொருவரும் இவைகளில் ஏதோ சிலவற்றை செய்கின்றனர். ஆனபடியினால் எல்லாரும் பாவஞ்செய்கின்றனர், எனவே எல்லாருக்கும் இரட்சிப்பு அவசியமாயிருக்கிறது அல்லது அவர்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு தேவையாயிருக்கிறது. எப்படி பழைய மனிதனின் பாவத்தைக் களைந்துபோட்டு கிறிஸ்துவுக்குள் புதிய மனிதனை எப்படித் தரித்துக்கொள்ளுவது என்பதை உங்களுக்குக் காண்பிப்பது எங்களுடைய நோக்கமாயிருக்கிறது.

மனிதனுடைய எல்லா பாவங்களிலும், கொலை அல்லது ஒரு மனிதனை விரோதத்தினால் கொன்றுபோடுவதைக் காட்டிலும் அதிக கொடூரமானது வேறொன்றும் இல்லை. ஆனபடியினால், நம்முடைய இந்த பாடத்தில் நாம் கொலை செய்தல் பற்றி இப்போது படிக்கவிரும்புகிறோம்.

நான் நம்புகிறேன், நான் மற்ற மனிதனை கொலை செய்திருக்கிற எவனொருவனைப் பற்றியும் பேசவில்லை, ஆனால் நேர்மையான காரியத்தைச் செய்து கொண்டிருக்கலாம். நான் அப்படிச் செய்வேனென்றால் உறுதியாக உங்களுடைய நன்மைக்கென்று இதைக் கூறவேண்டியவனாயிருக்கிறேன். ஆனால் இந்தப் பாடம் இந்த பாவத்தை ஒருபோதும் செய்யாத உங்கள் யாவருக்காகவும் வடிவமைக்கப்பட்டது. நாம் இது குறித்து வேதாகமம் என்ன கற்பிக்கிறது என்ற விழிப்புணர்வைப் பெறும்படிக்கு விவாதிக்கப்போகிறோம். மேலும் அதன்படி செய்யப்போகிறோம். இது நமக்கு மரியாதைக்குரிய வாழ்வுக்கென்று உதவிசெய்ய வேண்டும். மேலும், இப்படிப்பட்டவை ஒருபோதும் குற்ற உணர்வை உருவாக்கக் கூடாது என ஜெபிக்கிறேன்.

கொலை செய்தல் அல்லது விரோதத்தினால் கொன்று போடுதல் போன்ற செயல்களுக்கு பல காரணங்கள் இருக்கிறது. சிலர் பணத்திற்காக ஏனென்றால் பொறாமையினிமித்தம், பழிவாங்கத் தேடுதலினிமித்தம், வெறுத்ததலினிமித்தம், தொடர்ச்சியான வாக்குவாதத்தினிமித்தம், குடிப்பதற்குப் பழகி அப்படியே ஒவ்வொன்றாக, ஒவ்வொன்றாக பட்டியல் கூடிக்கொண்டே செல்லுவதினால் கொலை செய்கின்றனர்.

வேதாகமம், ஒரு மனிதன் கோபம் ஏற்பட்டபடியால் தன் சொந்த சகோதரனையே கொலை செய்த முதல் கொலையைப் பற்றி நமக்குக் கூறுகிறது. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இந்த இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள் என்பது நமக்குத்தெரியும். இந்த வேதவாக்கியம் தொடர்ந்து, "பின்பு அவனுடைய

சகோதரனாகிய ஆபேலைப் பெற்றான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான். சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கைகளையும் கர்த்தர் அங்கிகரித்தார். காயீனையும் அவன் காணிக்கைகளையும் அவர் அங்கிகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது. அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி வேறுபட்டது? நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்.

காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்; அவர்கள் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான். கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான். அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது. இப்பொழுதும் உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக்கொள்ளத் தன் வாயைத் திறந்த இந்தப்பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தைப் பயிரிடும்போதும், அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்றார். அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது. இன்று என்னை இந்த தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்; என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே என்றான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமரும் என்று சொல்லி; காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் கர்த்தர் அவன்மேல் ஒரு அடையாளத்தைப்போட்டார்" (ஆதி.4:2-16)என கூறுகிறது.

எபிரெயர் 11:4-ல் நாம் "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான். அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" இவ்வாறு வாசிக்கிறோம். இந்தக் கூற்றிலிருந்து தேவன் ஆபேல் மற்றும் காயீனுடன் அவர்கள் ஏறெடுத்த பலிகளின் தன்மையைக் குறித்து பேசியிருக்கிறார் எனக் முடிவுக்கு வரமுடிகிறது.

ஜெபியுங்கள்

- நமது இந்திய தேசத்திற்காக...
- சுதந்திரம் காக்கப்பட...
- உலகத்திற்கே நல்மாதிரி தேசமாக மாற...
- மனிதநேயம் பெருக...





ஸ்திரீகளும் இயேசுவின் தாயாகிய மரியாளும் இருந்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்களெல்லாரும் இவர்களோடு ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அந்த ஸ்திரீகள் செய்த காரியங்கள் இரண்டு. ஒன்று, ஒருமனப்பட்டவர்களாயிருந்தார்கள். இயேசுவின் நாமத்தில் கூடுகிற அன்பு சகோதரியே, உங்களிடத்தில் இவ்விதமான ஒருமனமிருக்கிறதா? சபையில் ஒருவர் ஜெபிக்கும்போது கூடியிருக்கிற சிலர் தங்கள் தங்கள் மனதில் என்ன நினைத்திருக்கிறார்களோ அதைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள், இல்லாவிட்டால் எதற்காக அந்த நபர் விண்ணப்பிக்கிறாரோ அந்த விண்ணப்பத்தில் முழுகவனம் செலுத்திக் கொண்டிருப்பவருக்கு இடையூறாக ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று ஓயாமல் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இப்படி ஜெபிப்பது ஒருமனப்பட்டு ஜெபிக்கின்ற ஜெபமாகவும் விண்ணப்பமாகவும் இருக்கமுடியாது. ஒருமனம் என்றால் ஒரே காரியத்தை கூடியிருக்கிற அனைவரும் மனதில் கொண்டு ஜெபிப்பதாகும். இடைவிடாமல் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள் என வேதம் கூறாமல் ''எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்'' என்று கூறுகிறது ஆங்கில வேதாகமத்தில் “Give thanks in all circumstances” என்றுள்ளது. அப்படியானால் யோபு கூறினதுபோல் 'கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்' என எச்சூழலிலும் ஸ்தோத்திரம் சொல்ல வேண்டும்.

**இரண்டாவதாக,** அந்த ஸ்திரீகள் ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தரித்திருந்தார்கள். சில ஆங்கில வேதாகமங்களில் Continued மற்றும் Constantly என்று எழுதப்பட்டுள்ளது. ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தொடர்ச்சியாக மற்றும் இடைவிடாமல் இருந்திருக்கிறார்கள். நாம் இங்கே சற்று சிந்திப்போம். நாம் கூடி ஜெபிக்கையில் இவ்வாறு இருக்கிறோமா? அல்லது ஜெபம் முடிவதற்குள் நம்சொந்த வேலைகளினிமித்தம் இடையிலேயே எழுந்து சென்று விடுகிறோமா? ஆதி அப்போஸ்தலர்களோடேகூட, ஸ்திரீகளும் உறுதியுடனிருந்தனர். புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் என்ற வசனத்தின்படி சபை சகோதரர்களோடு ஒருமனப்பட்டவர்களாக ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தரித்திருந்த சமயத்தில் கிறிஸ்துவின் சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. இன்றும் நம் தமிழகம் முழுவதும், ஏன் நம் பாரதம் முழுவதும் ஆங்காங்கே கிறிஸ்து தமது சபையை ஸ்தாபிக்க வல்லவராயிருக்கிறாரே. நம்மைப் பாவத்திலிருந்து மீட்க இரத்தம் சிந்தி மரித்த இயேசுவுக்காக நீ என்ன செய்யப்போகிறாய்? என்பதை சிந்தித்துப்பார். முதலாவது மீட்பின் செய்தியை யூதர்களுக்கு அறிவித்த அன்னாளைப் போலவும், முதல் ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்திரீகளைப்போலவும், இயேசுவுக்காக இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்காக எதையும் செய்ய முதல் நபராக இருப்போம். கர்த்தர் தாமே அவருக்குப் பிரியமானதைச் செய்ய நமக்கு உதவிசெய்வாராக!

-K.R.K.Ravi Asir

**தெரிந்துகொள்வோம்**

- ஜைன, புத்த மத நூல்கள் முதன் முதலில் பிராகிருதம் மற்றும் பாலி மொழியில் எழுதப்பட்டன.
- ஜப்பனியர்களுக்கும், எஸ்கிமோக்களுக்கும் பிரதான உணவு மீன்தான்.
- மனித ரத்தத்தில் பல வகைகள் உண்டு என்று கண்டபிடித்தவர் ராபர்ட் கோலோ

ஆனால் கணவனும் மனைவியும் மட்டும் கடைசிவரை ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பார்கள் என்பர். ஆனால் இந்த அன்னாள் அந்த உறவை இழந்த போதிலும் தேவனைப்பற்றிக் கொண்டது எவ்வளவு விசேஷித்த மேன்மையாயிருக்கிறது! சங்கீதக்காரனாகிய தாவீது இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்கிறார். ஆம், இதன்படி இவள் ஒரு பாக்கியவதி, தேவலாயத்தை விட்டு நீங்காமல் உபவாசித்து ஜெபம் பண்ணி அதாவது மரியாள் இயேசுவின் பாதத்தைவிட்டு நீங்காமல் நல்ல பங்கை தெரிந்துகொண்டதுபோல, இவளும் தேவாலயத்தை விட்டு நீங்காது இருந்திருக்கிறாள்.

அன்பு சகோதரியே, நம்மை சுற்றிலும் உள்ள அநேகர் இந்த மீட்பரைப் பற்றி அறியாமலிருக்கிறார்கள். இந்த மீட்பராகிய இயேசுவைக் குறித்து அறிவித்தும் ஏற்றுக்கொள்ளாமல் ஏளனம் செய்கிறவர்களும் அநேகர். இப்படியிருக்க, நீங்கள் உங்களைக் குறித்தும், உங்களுடைய இழப்பு, வேதனை கஷ்டம், நஷ்டம், உங்களுடைய உறவுகள் இதுபோன்ற இன்னும் எத்தனையோ காரியங்களைக் குறித்தும் சிந்தித்துக்கொண்டு இருக்கிறீர்களா? மார்த்தாளைப்போல அநேகக் காரியங்களைக் குறித்து கவலை கொண்டிருப்போமானால் நாம் ஒன்றையும் சாதிக்கப்போவதில்லை. மரித்தோர் மரித்தோரை அடக்கம்செய்யட்டும், நீயோ என்னைப் பின்பற்றி வா என இயேசு கூறிய வார்த்தை உங்கள் செவியில் விழவில்லையா? இயேசுவை அறிந்தும், அறியாதவர்களைப்போல, ஆவியில் மரித்தவர்களாக ஏனோ, தானோவென்று ஜீவிப்பதை தேவன் ஒருபோதும் விரும்புகிறதில்லை. நம்மை நாமே தேவ சமூகத்தில் குணப்படுத்திக்கொண்டு மற்றவர்களை ஸ்திரப்படுத்த இந்த மீட்பின் செய்தியை அறிவிப்போம். மேன்மையான இந்தப் பணிக்கு ஈடான ஒரு பணியும் இவ்வுலகில் இல்லை. இழந்த காரியங்களையே நினைத்துக் கொண்டிராமல் வரப்போகும் பரலோக மேன்மையை நினைத்து, ஒவ்வொருநாளும் இழந்துகொண்டிருக்கிற ஸ்திரீகளைக் காப்பாற்றுவோம். அன்னாளைப் போல இரவும் பகலும் தேவசமூகத்தை விட்டு நீங்காமல் தனிப்பட்ட முறையில் உபவாசித்து, ஜெபித்து மீட்பின் செய்தியை அறிவிக்க ஆயத்தப்படுவோம்.

**முதல் ஜெபக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள்** (Attended the First Prayer Meeting):

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமாகி, அவர்களை நோக்கி பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறும்படி எருசலேமை விட்டுப் போகாமல் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் (அப்.1:3-5). அதன்படி "அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" (அப்.1:14). இந்த ஜெபக்கூட்டம் இயேசு பரமேறிச்சென்றபின் கூடின முதல் ஜெபக்கூட்டம். அந்த முதல் ஜெபக்கூட்டத்தில்



## வேத அறிவுப்போட்டி 226-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. எலிகூ | - யோபு33:6 |
| 2. பவுல் | - 1தீமோ.2:7 |
| 3. பூரணமாய் | - சங்.31:23 |
| 4. அமைதியாயிருப்பான் | - நீதி.1:33 |
| 5. தீமோத்தேயுவுக்கு | - 2தீமோ.2:25 |
| 6. பிரசங்கி | - பிர.3:12 |
| 7. சுத்தமாயிராது | - தீத்து1:15 |
| 8. எசேக்கியா | - ஏசா.39:4 |
| 9. நியாயப்பிரமாணத்தின்படி | - எபி.7:5 |
| 10. அனனியா என்கிற தீர்க்கதரிசி | - எரே.28:17 |

## வேத அறிவுப்போட்டி 227-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. யோபு | - யாக்.5:11 |
| 2. குயவனுடைய | - புலம்.4:2 |
| 3. கிறிஸ்து | - 1பேது.2:22 |
| 4. வெள்ளியின் | - எசே.22:18 |
| 5. பேதுரு | - 2பேது.1:16 |
| 6. நேபுகாத்நேச்சார் | - தானி.4:1 |
| 7. ஐக்கியப்பட்டிருப்போம் | - 1யோவா.1:7 |
| 8. பலனளிப்பேன் | - ஓசி.4:9 |
| 9. மகாநாளின் | - யூதா 6 |
| 10. நிர்வாணியாய் | - ஆமோஸ்2:16 |

## வேத அறிவுப்போட்டி எண் 226ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 2. Mrs. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 3. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 4. Mrs. பாலின்டேனியேல் | - சென்னை |
| 5. J. ஆலிவ் | - கோவை |
| 6. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி | - திருச்சி |
| 7. Mrs. ஜெனிதர்மராஜ் | - திருநெல்வேலி |
| 8. S. செல்வராஜ்சாலமோன் | - வள்ளியூர் |
| 9. B. ஞானதீபம் ஜெபராஜ் | - இடையான்குடி |
| 10. P. சந்திராடேனியல் | - நஞ்சான்குளம் |
| 11. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 12. Mrs. புளோராசுந்தர் | - மதுரை |
| 13. Mrs. கிறிஸ்டோபல்சாலமோன் | - கோவை |
| 14. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 15. S. தங்கம் | - சாந்தாபுரம் |
| 16. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 17. T. ஏஞ்சலின் நேசமலர் | - சாந்தாபுரம் |
| 18. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 19. Mrs. பியூலாஜேசுராஜன் | - புதுகை |
| 20. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 21. T. ராஜாத்தி | - கோம்பை |
| 22. Mrs. கெத்சிசெல்வின் | - சென்னை |
| 23. Mrs. ரத்னாபாய் பிரசாத் | - மதுரை |
| 24. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 25. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 26. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 27. Mrs. ராஜம்மாள் | - சென்னை |
| 28. தேவதா தேவப்பிரியம் | - சென்னை |
| 29. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 30. S. லதா | - தேனி |
| 31. S. ஜாய் சந்திரகாந்தா | - நெல்லூர் |
| 32. Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் | - திருநெல்வேலி |
| 33. Mrs. கமலவேணி | - சென்னை |
| 34. A. சவுந்தர்யா | - பரமத்தி |
| 35. J.S. ஜெயாமேரிதாய் | - திண்டுக்கல் |
| 36. Mrs. ஃபிராங்கலினாஜான் | - ஊட்டி |
| 37. E. அதிசையம் | - பனைகுடி |
| 38. R. ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 39. D. சாந்தாதேவி | - தேனி |
| 40. Mrs. சாந்தா பழநி | - தர்மபுரி |

## வேத அறிவுப்போட்டி எண் 227ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. T. ஏஞ்சலின்நேசமலர் | - சாந்தாபுரம் |
| 2. Mrs. கிறிஸ்டோபல்சாலமோன் | - கோவை |
| 3. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 4. S. ஜாய் சந்திரா காந்தா | - நெல்லூர் |
| 5. S. தங்கம் | - சாந்தாபுரம் |
| 6. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 7. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 8. N. இந்திராஜெபக்கனி | - நாசரேத் |
| 9. Mrs. ஜெனிதர்மராஜ் | - திருநெல்வேலி |
| 10. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 11. R. அந்தோனியம்மாள் | - கலுங்குவிளை |
| 12. Mrs. கெத்சிசெல்வின் | - சென்னை |
| 13. Tmt. மரகதம்திரவியம் | - கோம்பை |
| 14. A. ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 15. J. ஆலிவ் | - கோவை |
| 16. Mrs. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 17. S. லதா சூர்யமூர்த்தி | - தேனி |
| 18. R. ஞானசிரோன்மணி | - சமையநல்லூர் |
| 19. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 20. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 21. S. செல்வராஜ் சாலமோன் | - வள்ளியூர் |
| 22. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 23. Mrs. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 24. M. முருகன் | - நாமக்கல் |
| 25. Mrs. பிரமிளாரேவதி | - கோவை |
| 26. T. ராஜாத்தி | - கோம்பை |
| 27. S.V. தனபால் | - கொடுமுடி |
| 28. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 29. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 30. P. சந்திராடேனியல் | - நஞ்சான்குளம் |
| 31. ரூபி ஜெய சேகர் | - கலுங்குவிளை |
| 32. Mrs. ஃபிராங்கலினா ஜான் | - ஊட்டி |
| 33. Mrs. ஞானதீபம் ஜெபராஜ் | - திருநெல்வேலி |
| 34. S. சாந்தாகுமாரி | - நாசரேத் |
| 35. Mrs. ரத்னாபாய் பிரசாத் | - மதுரை |
| 36. E. ஜாய் ஹெலன் புனிதா | - சென்னை |
| 37. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 38. ஜாய் மேத்யூ | - வி.கே.புரம் |
| 39. G. பூங்கோதை | - கோபி |
| 40. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |

41. N. ஜெபத்தாய் - நாசரேத்
42. Mrs. இந்திரா ஜெபக்கனி - நாசரேத்
43. Mrs. தேவிராஜசிங் - திருப்பூர்
44. S.V. தனபால் - கொடுமுடி
45. S. சாந்தகுமாரி - நாசரேத்
46. Mrs. இளவரசிஜோபிதா - கோவை
47. ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
48. E. ஜான்ஹெலன்புனிதா - சென்னை
49. Mrs. ராணி - தூத்துக்குடி
50. Mrs. தேவபுஸ்பம் - நாசரேத்
51. S. ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
52. அல்லிராணி காட்வின் - சென்னை
53. G. பூங்கோதை - கோபி
54. S. அன்னம்மாள் - தூத்துக்குடி
55. Mrs. ஜெயமணி ராஜம்மாள் - கடலூர்



41. J.S. ஜெயாமேரிதாய் - திண்டுக்கல்
42. E. அதிசயம் - பனைகுடி
43. Mrs. பாலின்டேனியல் - சென்னை
44. D. சாந்தாதேவி - தேனி
45. Mrs. சாந்தாபழநி - தர்மபுரி
46. அல்லிராணிகாட்வின் - சென்னை
47. Mrs. ஜெயமணி ராஜம்மாள் - கடலூர்
48. Mrs. ஃபுளோராஎழில் - ஆம்பூர்
49. J. ஜாய்கமலம் - நாசரேத்
50. Mrs. ஜெபாமேசஸ் - தூத்துக்குடி
51. J. விக்டர்சுவிசேஷமுத்து - ஆனந்தபுரம்
52. தேவதா தேவப்பிரியம் - சென்னை
53. S. ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
54. D. தேவபுஸ்பம் - நாசரேத்
55. J. டயானாடேனியேல் - சிவகாசி
56. M. முருகன் - நாமக்கல்
57. Mrs. ஜோதிமணி அப்பாத்துரை - மதுரை
58. Mrs. அன்னம்மாள் - தூத்துக்குடி
59. K. ராணி மூர்த்தி - திருநெல்வேலி
60. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
61. Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் - திருநெல்வேலி
62. A. ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி

**வீண் சிந்தனைகளை நான் வெறுத்து**
**உமது வேதத்தில் பிரியப்படுகிறேன் (சங்கீதம் 119:113)**

## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

Evangelizing Our Friends

*-TVOTI*



**சபையோடு இணையச்செய்தல்**
**உங்கள் நண்பர்களுக்கு உதவுகிறது**

Getting Involved with the Church Helps Your Friends **பாடம் -9**

**எவ்வாறு இதை நாம் பிரயோகிக்கிறோம்?**

பொதுவான இலக்குகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றும்படி மற்றவர்களின் ஐக்கியத்தோடு இணைந்து கிரியை நடப்பிக்கையில் நாம் சந்தோஷமடைகிறோம் என்பது சமூகத்தைப் பற்றிய ஆர்வமிகுந்த காரியமாயிருக்கிறது. இப்படிப்பட்ட சந்தோஷமான காரியங்களை ஒரு வழியிலோ அல்லது இன்னொரு வழியிலோ நம் வாழ்வில் பெற்றிட நாமனைவரும் நாடுகிறோம். துரதிஷ்டவசமான, பாவம் நம்மை தேவனிடமிருந்தும் மற்றவர்ரிடமிருந்தும் பிரிக்கிறது (ஏசா.59:2). நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசித் அதற்குக் கீழ்ப்படியும்போது தேவன் நம்மை அவருடைய சமூகத்திற்குள் மறுபடியும் கொண்டுவருகிறார்; அந்நேரந்தானே நாம் சபைக்குள் சேர்க்கப்படுகிறோம் (அப்.2:42-47). நம் வாழ்வில் சபையோடு ஐக்கியப்பட ஆரம்பிக்கையில், நாம் வளருகிறோம். அவ்வாறாக சபையும் வளருகிறது. ஏதேனும் விசேஷித்த செயல்களை செய்கின்ற சமூகத்தில் அங்கம் வகிக்கும்படி விரும்புவார்கள். இது சபையில் வேலை செய்ய மிகுந்த ஆர்வமளிக்கிறதாக இருக்கின்றது. ஏனென்றால் இது அன்பின் சூழலில் வேலை செய்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற விரும்புகிறோம். ஆகவே நாம் என்ன செய்வோம்?



பெண்கள் பகுதி

## விசேஷித்த மேன்மை

## Special Distinction

*-Glory Arjunan*




**வே**தாகமத்தில் விசேஷித்த மேன்மையான இடத்திலிருந்த சில ஸ்திரீகளாகிய சிலுவையின் கடைசி (Last At the Cross) வரை இயேசுவோடு இருந்த மகதலேனா மரியாள், யோசேயின் (இயேசுவின் தாயும்கூட) தாயாகிய மரியாள், முதலாவது கல்லறையினிடத்திலிருந்து (First At the Tomb) இயேசுவை தரிசித்த மகதலேனா மரியாள் மற்றும் முதலாவது இயேசுவின் உயிர்த்தெழுதலை அறிவித்த (The First to proclaim Resurrection) மகதலேனா மரியாள் மற்ற மரியாள் ஆகியோரின் மேன்மையான காரியங்களைக் குறித்து வேதாகம ஆதாரத்துடன் அறிந்து கொண்டோம். அதைப்போலவே இன்றும்கூட வேதாகமத்தில் விசேஷித்த மேன்மையான இடத்தைப்பிடித்த வேறு சில சகோதரிகளைக்குறித்து ஆராய்ந்து பார்ப்போம்.

**முதலாவது யூதர்களுக்கு அறிவித்தவள்** (The First Preach to the Jews):

யார் அவள்? எதைப் பற்றி அறிவித்தாள்? லூக்கா2:36,37-ல் அவளைக் காணலாம், “ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயதுசென்றவளுமாயிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமலும், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் (இயேசுவை) பேசினாள்”. இந்த தீர்க்கதரிசி எருசலேமிலே தங்களுக்கு மீட்புண்டாக வேண்டும், இரட்சிப்புண்டாக வேண்டுமென காத்திருந்த யூதர்களுக்கு இயேசுவைக் குறித்து அறிவித்தாள். பாவத்திலிருந்து யாவரையும் மீட்கப்போகிற இயேசு இவர்தான் என்று யூதர்களுக்கு அறிவித்தாள். அன்பு சகோதரியே, அவளுடைய சூழ்நிலைகளை அறிந்தீர்களா? ஒன்று, அவள் தன் புருஷனோடு ஏழுவருஷம் மட்டுமே வாழ்ந்தவள், அடுத்தாக, அவள் ஏறக்குறைய எண்பத்துநாலு வயதை அடைந்த விதவை. கன்னிப்பருவத்தில் விவாகம் செய்து ஏழு ஆண்டுகள் மட்டுமே புருஷனோடு வாழ்ந்து அதன்பின் ஏறக்குறைய எண்பத்துநாலு வயது வரை விதவைக் கோலம் பூண்டவளாயிருந்த அவளது மனநிலை எப்படியிருந்திருக்கும் என்று சற்றே சிந்திபோம்! அவள் நிச்சயமாகவே தன்னுடைய விதவையிருப்பை குறித்து அதிகக் கவலைகொள்ளாதவளாக இருந்திருக்கலாம். அதனால் தான் அவள் தேவாலயத்தை அண்டி, அதை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி ஆராதனை செய்து கொண்டிருந்தாள் என வாசிக்கிறோம். இந்த அன்னாளை நினைக்கும் போது எனக்கு மெய்யாகவே மெய்சிலிர்க்கிறது. பொதுவாக, சமுதாயத்தில் பிள்ளைகளெல்லாரும் தாயையும் தகப்பனையும் விட்டுச் சென்று விடுவார்கள்,

முறையில் சரீரப்பிரகாரமான தண்டனை அல்லது வேறு எந்தமுறையிலாவது உங்கள் குழந்தைகளைத் தண்டித்தல்.

▶ உங்களுடைய குழந்தையின் "கொச்சையான" கோமாளித்தனங்களைப் பார்த்து சிரிக்காதீர்கள் அவைகள் உண்மையாகவே கீழ்ப்படியாமையான செயல்கள். அவைகள் சரிசெய்யப்படவேண்டியவை. பெற்றோர்களின் ஒரு சிறிய முன் எச்சரிக்கை பல ஆபத்துகளிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர்களுக்கு உதவும். ஒரு சிறுகுழந்தை தன்னைத் தூக்கி வைத்துக்கொண்டிருந்த பாட்டியின் முகத்தை அடித்துக் கொண்டேயிருந்த அந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அந்த முதியவள், அவள் ஒரு சின்ன குழந்தைதான் உண்மையாகவே அவள் தீங்கு செய்யவில்லை என அறிந்து கொண்டவளாய் சிரித்துக்கொண்டிருந்தாள். ஆனால் அந்தக் குழந்தையின் தகப்பன் வேகமாய் வந்து அக்குழந்தையின் கையைப்பிடித்து எந்த புன்முறுவலையும் காண்பிக்காது மிகவும் கண்டிப்பாக செய்யாதே எனக் கூறினார். மேலும் அவர் "நான் சிரித்தால்" "அவள் இது ஒரு விளையாட்டு என நினைப்பாள்" மேலும் மற்றவர்களை அடிப்பது அவளுக்கு சரியான செயலாகத் தோன்றும். அந்தச் செயலில் அவள் வளருவதை நான் விரும்பவில்லை, மேலும் அவள் அதைச் செய்யாதபடிக்கு காலஞ்சென்ற பிறகு நான் போதிக்கிறவனாக இருக்கவிரும்பவில்லை என்று விளக்கினார். எப்பேர்பட்ட ஞானமுடைவர் அவர்!

▶ குழந்தைப் பருவத்திலிருந்தே ஒரு குழந்தையை ஆவிக்குரிய காரியத்திலும் தேவனோடு ஐக்கியங்கொள்ளவும் பயிற்றுவிக்கத் தொடங்குங்கள் நாள் முழுவதும் வாழ்வின் ஒவ்வொரு நாள் காரியங்களும் நமக்கு எல்லாவற்றையும் கொடுத்து வருகிற நம்முடைய அன்பின் தேவனுக்குரியது. அவனுக்கு வேதவாக்கியங்களைக் கற்றுக்கொடுங்கள், அவன் வேதபாடவகுப்புகளில் ஒழுங்காகப் பங்கேற்கிறானா எனக் கவனியுங்கள். இதுவே அவன் தேவன் மேல் தன் வாழ்வை அஸ்திபாரமிட்டு வளர்ச்சியடைவதற்கு அவனுடைய நினைவில் நீங்கள் உருவாக்குகிற இயல்பான அடித்தளமாகும். நீங்கள் அவனுடைய இருதயத்தில் இந்த சத்தியங்களை நிலைநாட்ட கொஞ்ச காலத்தையே பெற்றிருக்கிறீர்கள், எனவே தேவன் அவன் எவ்விதமான புயலைச்சந்தித்தாலும் வாழ்நாள் முழுவதும் அவனுடைய அடைக்கலமாயிருக்கிறார்.

அடிக்கடி, ஒரு குழந்தையைப் பயிற்றுவிப்பதில், ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான உலகத்திற்கிடையில் குழப்பங்கள் இருக்கும். ஞாயிற்றுக் கிழமையில் கிரிக்கெட் போட்டி அல்லது ஆராதனைக்குச் செல்லுவதை தெரிந்துகொள்ளுவதா என்ற குழப்பம் ஏற்படலாம். சமீபத்தில் ஒரு இளைஞன் தான் குழந்தையாயிருந்த போது ஆராதனையைப் பற்றி தன்னுடைய தகப்பனுடைய கண்டிப்பினையும் அவர்கள் ஒருபோதும் கூட்டத்திற்குக் காலதாமதமாய் செல்லக்கூடாது என்பதற்காக அவர்கள் தீட்டிய காலை நேரத்திட்டத்தைக் குறித்தும் கூட தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தான். இளைஞனாக, தன் விருப்பத்தின்படி தீர்மானங்களை உருவாக்குகின்றவனாக, "இப்போது என் தகப்பன் எனக்கு ஒரு ஆன்மீக உணவளிப்பவராக இருக்கிறார்" என்று சொன்னான்.

நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஒழுக்கமும், கவனமுள்ள போதனையும் இப்போதைக்குத் தேவையில்லை எனத் தீர்மானித்திருப்பீர்களானால், தயவுசெய்து இக்காரியங்கள் எல்லாவற்றையும் நன்கு யோசித்துப் பாருங்கள். "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" (எபி.12:11).




சபையில் ஊழியஞ்செய்ய எல்லா இடங்களிலும் வாய்ப்புகள் உள்ளன. சபையானது ஒவ்வொரு வாரமும் சிறப்பான முறையில் செய்யக்கூடிய மூன்று பிரதான பணிகளைப் பெற்றுள்ளது.

✦ முதலாவது, வாரத்தின் முதல்நாளில் சபையானது கூடிவந்து தேவனை ஆராதிக்கிறது. அப்போஸ்தலர் 20:7 ல் "வாரத்தின் முதல்நாளிலே அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" என வாசிக்கிறோம். இந்த ஆராதனை வேளையில் நாம் பாடல்கள் பாடுகிறோம், ஜெபிக்கிறோம், கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்கிறோம், தேவ வார்த்தைக்குச் செவிசாய்க்கிறோம், அத்துடன் நமது வரவுக்கேற்றவைகளைச் செலுத்துகிறோம். பல்வேறு தரப்பட்ட ஜனங்கள் இந்த ஆராதனை வேளையை நல்லொழுக்கத்துடனும் கிரமமாகவும் செய்யவேண்டியவர்களாய் இருக்கிறார்கள் (1கொரி.14:40). சகல கிறிஸ்தவர்களும் வழிபாட்டு முறைமைகள் ஒவ்வொன்றிலும் பங்கு பெற வேண்டியவர்களாக இருக்கின்றனர். இத்தோடுகூட புருஷர்கள் முழுசபையையும் வழிநடத்திச் செல்லும் பொறுப்புடைவர்களாயிருக்கின்றனர், சபையில் ஒருவர் இளைஞனாயிருந்தபோதிலும் இந்த பொறுப்புகளை பகிர்ந்து கொள்ள ஆரம்பிக்கலாம்.

✦ சபையானது ஏழை மக்களுக்கு உதவி செய்ய முயற்சிக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் "இப்படிப் பிரயாசப்பட்டு பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றார்" (அப்.20:35). சமுதாயத்தில் அங்கத்தினர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் சரீரத் தேவைகளோடு கூட உதவிக்காகவும் கோரிக்கைகள் எழுகின்றன. சிலவேளைகளில் சபையானது உணவு சேமிப்பினைக் கொடுக்கிறது, சில வேளைகளில் ஆடைகள் கொடுக்கப்படுகிறது மற்றவேளைகளில் சபையானது நிதி உதவிகளையும் மற்ற உதவிகளையும் செய்கிறது. இவ்வித சகல முயற்சிகளும் வெற்றியடைய தனிப்பட்டவர்களுடைய பங்களிப்பு தேவைப்படுகிறது. "யாவருக்கும் நன்மை செய்யும்படிக்கு" (கலா.6:10). ஒருவேளை நீங்கள் சபைக்கு உதவக்கூடியவர்களாக இருக்கலாம்.

**பொது அறிவு**
**வினா – விடை**



1. யமுனை நதி பாயும் இந்திய நகரம் எது?
அ) ஆக்ரா ஆ) லக்னோ இ) ஜபல்பூர்
விடை: (அ) ஆக்ரா

2. பூமத்திய ரேகை பகுதியில் வளர்ந்துள்ள காடுகளின் பெயர் என்ன?
அ) சமூகக்காடுகள் ஆ) வெப்பமண்டலக்காடுகள் இ) மிதவெப்பமண்டலக் காடுகள்
விடை: (ஆ) வெப்பமண்டலக்காடுகள்

3. சீனா மற்றும் ஜப்பான் நாட்டில் புயல் காற்று எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) ஹரிக்கேன் ஆ) சுமுன்ஸ் இ) டைபூன்ஸ்
விடை: (இ) டைபூன்ஸ்

பெண்கள் பகுதி

## ஒருவருடைய குழந்தைகளைப் பயிற்றுவிப்பதற்கும் நல்லொழுக்கப்படுத்துவதற்குமான தீர்மானமின்மை

## The Decision Not Train and Disciline one`s Children

*-Betty*




**இ**னங்களின் விருத்தி என்பது இயற்கையான ஒன்றும் உயிர்வாழ்வனவற்றின் முக்கியப் பகுதியாகவுமிருக்கிறது. இதைப் பற்றி சிறிது ஆராய்ந்து பேசுவது அவசியம். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட முதல் கட்டளை, "நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி....." (ஆதி.1:28) என்பதாகும்.

ஜனங்கள் பிள்ளைகளைப் பெற்றிருக்கின்றனர். சில நேரங்களில் பெற்றோர்கள் இருவரும் கவனத்துடன் நிகழ்ச்சியின் நேரத்தைத் திட்டமிட்டு, எண்ணிக்கையுள்ள பிள்ளைகளுக்கு கொடுக்கவும், தங்கள் பிள்ளைகளின் சரீரம், மனவெழுச்சி, மற்றும் ஆவிக்குரிய தேவைகளில் கவனம் செலுத்தும்படிக்கும் அவர்கள் ஆயத்தம் செய்ய வேண்டுமெனவும் அறிந்திருக்கிறார்கள்.

ஆனால் பெற்றோர்களின் சார்பில் சம்பந்தமில்லாமலும் முன் எச்சரிக்கையில்லாமலும் உலகில் அடிக்கடி குழந்தைகள் பிறக்கின்றன. அவர்கள், சிறிதளவு பெற்றுக்கொண்டு பசியின் விளிம்பிலும் அல்லது கல்வி இல்லாமலும் வாழ்கின்றனர். மேலும், இவ்வுலகத்திலும்கூட அவர்கள் முன்னேற்றத்திற்கான தங்களுடைய விதியில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றனர், வரப்போகிற ஆவிக்குரிய நித்திய உலகில் மிகக் குறைவாகவே காணப்படுவார்கள்.

பெற்றோர்கள் உலகத்திற்குள் தாங்கள் கொண்டுவந்த உதவியற்ற சிறுபிள்ளைகளுக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும். தீமோத்தேயு5:8, "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" எனக் கூறுகிறது.

ஆனால் பிள்ளைகளுடைய சரீரத் தேவைகளை மட்டும் பூர்த்திசெய்வதைக் காட்டிலும் பிள்ளைகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதில் அதிகமான பொறுப்புகள் இருக்கின்றன. தொடர்ச்சியான போதனையும் பயிற்சியும் அவசியம், ஞானத்துடனும் அன்புடனும் உருவாக்கப்படவேண்டியதும், வயதான ஒருவருடைய தரிசனம். மேலும் குழந்தையாயிருக்கின்றவனை களிமண்ணிலிருந்து உருவாகின்ற ஒன்றைப் போலவுமிருக்க வேண்டிய ஒன்றாகக் காட்டுகிறது.

நீதிமொழிகள் 22:6, "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" என வாக்களிக்கிறது.

ஆனால் இளம் பெற்றோர்கள் அதிகமாக அடிக்கடி குழந்தைகளைக் கட்டுப்படுத்துவதில்லை! குழந்தைகள் வடிவமைக்கப்படுவதும், பயிற்றுவிக்கப்படுவதும் பெற்றோர்களால் தொடர்ந்து முன்நோக்கி நடைபெற வேண்டியதாயிருக்கிறது, மேலும் அவர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்ச்சியடையப்பண்ணுவதில் ஒருபோதும் அமைதியாயிருக்கக் கூடாது. ஒருவேளை அவர்கள் என்ன செய்யவேண்டுமென உறுதியில்லாதவர்களாய் இருக்கலாம். ஒருவேளை அவர்கள் மிகவும் கடுமையாயிருப்பதில் அச்சம் கொள்ளலாம், தங்களுடைய இளங்குழந்தையை இழிவுபடுத்துவதாகத் தோன்றலாம். ஒருவேளை அவர்கள் அவன் இப்போது புரிந்து கொள்ளுவதற்கு மிகவும் சிறியவனாயிருக்கிறான், மேலும் அவன் பெரியவனாகும் போது எப்படி நடந்துகொள்ளவேண்டுமென அவனுக்கு தாங்கள் போதித்துக் கொள்ளலாம் என தவறான தீர்மானத்தை உருவாக்கினவர்களாய் இருக்கலாம்.



இப்படிக் காத்திருப்பது பெற்றோரின் வேலையை மிக அதிகமாகக் கடினப்படுத்தும். ஒரு முரட்டாட்டம் பண்ணும், கூச்சலிடும், ஒழுங்கீனமான குழந்தை பெற்றோர்களுக்கு வெறுப்பூட்டுகிற குழந்தையாகயிருக்கும், வழக்கமாக பார்ப்பவர்களும் அவனுடைய நடத்தையை விரும்பமாட்டார்கள். மற்றபெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் மேல் இவனுடைய செல்வாக்கிருப்பதைக்குறித்து தங்களுடைய குழந்தைகள் இந்த தொந்தரவுக்குள்ளாகிவிடுவார்களென ஆத்திரமடையலாம். குழந்தை வளர்ந்து வருகையில், அவனுடைய நடவடிக்கை மோசமாகயிருந்தால் மற்றவர்கள் அவனோடிருக்க விரும்பமாட்டார்கள், அவன் அவர்களுடைய மனநிலையை அறிந்து, அதனால் வேதனையடைவான், இருந்தபோதும் அவன் மற்றவர்கள் தன்னை ஒதுக்குவதற்கான காரணத்தைப்புரிந்து கொள்ளாமலிருக்கலாம். இது சின்ன தொந்தரவு கொடுக்கிறவனாக வளர்ந்து வருவதிலிருந்து தங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றுவது பெற்றோருடைய கடமையாகயிருக்கிறது. அந்த குழந்தை 'குற்றஞ்சாட்டப்பட்டு' புறக்கணிக்கப்பட்டவனா யிருந்தாலும், இது அவனை நேசிக்கப்படாத, அருவருப்பான ஒருவனாக வளர அனுமதித்த பெற்றோரையே சாரும்.

உங்களுடைய குழந்தையைப் பயிற்றுவிப்பதில் கண்டிப்பில்லாத பழக்கத்தைக் கொண்டிருந்தீர்களானால், உங்களுடைய தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுங்கள். பெற்றோராக நீங்கள் செய்கின்ற வேலை உங்கள் வாழ்வில் மிக முக்கியமானதாக இருக்கிறது! இதை அற்பமாய் எண்ணாதீர்கள் அல்லது அதற்கு அதிகமான நாட்கள் உண்டு என நினைக்காதீர்கள். பல பாடங்களினூடே நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியது ஒவ்வொரு நாளினுடைய மிகமுக்கியமான தேவையாகும். நீங்கள் மதிப்புமிகுந்த சின்ன ஆத்துமாவை உலகிற்கு ஆசீர்வாதமாயிருக்கும்படிக்கு வடிவமைப்பதற்கு குறைந்த வருடங்களையே பெற்றுள்ளீர்கள்.

நீங்கள் வருங்கால ஒரு தகப்பனை அல்லது ஒரு தாயைப் பயிற்றுவிக்கின்றீர்கள் என்பதை நினைக்க வேண்டும், மேலும் நீங்கள் உங்கள் குழந்தைகளைப் பயிற்றுவிக்கும் முறையே அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதற்கு அடித்தளமாயிருக்கும்.

இவைகள் உங்கள் மனதில் கொள்ள வேண்டிய பயிற்றுவிப்பதற்கான வழிமுறைகள்:

▶ வேண்டுகோலுக்கு உத்தரவு சொல்லும் முன் அல்லது ஆம் அல்லது இல்லை என சொல்லும் முன், அதை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் செய்யப்போகிற காரியம் போதுமான அளவுக்கு முக்கியமானதாகயிருந்தால் நின்று நிதானியுங்கள்.

▶ ஆனால் நீங்கள் சிலவற்றைக்கூறினால், அதை நடைமுறைக்குக் கொண்டுவாருங்கள். இதுவே உங்கள் குழந்தை ஒழுக்கத்தின் பாதுகாப்பான எல்லைகளைக் கற்றுக் கொள்ள ஏதுவான வழியாகும். நீங்கள் அவனுடைய வழிகாட்டி, மேலும் நீங்கள் உங்களுடைய பொறுப்பினைக்குறித்து ஆழ்ந்த யோசனையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அவன் உட்காரவோ அல்லது மௌனமாயிருக்கவோ தேவவையில்லையென்றால், அதைச் செய்யும்படி சொல்லாதீர்கள். ஆனால் நீங்கள் அதைச் செய்யும்படி சொன்னால், அதற்குக் கீழ்ப்படியாமலிருக்க அனுமதிக்காதீர்கள்.

▶ கீழ்ப்படிதலுக்கு பாராட்டுதலோடு, அன்போடு, ஏற்றுக்கொள்ளுதலோடு சன்மானம் கொடுங்கள். கீழ்ப்படியாமைக்கு வேறுபட்ட திருத்தத்தோடும் தண்டனையோடும் கைமாறுசெய்யுங்கள். அவைகள் இவ்விதமாக இருக்கலாம் (1) வாய்மொழி திருத்தம் (2) சில உபகாரங்கள் அல்லது பொம்மை போன்றவற்றிற்கு மறுப்பு தெரிவித்தல் (3) அவன் கீழ்ப்படியத் தீர்மானிக்கும் வரை நாற்காலியில் அமரச்செய்தல் அல்லது தனியாக ஓரிடத்தில் நிற்கச்செய்தல் (4) கட்டுப்பாடோடே கையினால் அடித்தல்